ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 9 ஜூன் 2004 கானம் : 11

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 103 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 84 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 74 | 9 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -78 | 13 |
| 7. | மாலே மணிவண்ணா - 21 | 19 |
| 8. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 21 | 22 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 105 | 27 |
| 10. | செய்திகள் | 31 |


ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், பெண்களைச் சமைக்கச் சொல்லி உற்சாகப்படுத்துவார். ‘‘மனதை ஆரோக்யமாக வைத்திருப்பதற்கு சமையல் ஒரு சிறந்த வழி. சீதை, த்ரௌபதி, பார்வதி ஆகிய எல்லோருமே நன்றாக சமைப்பார்கள். மஹாலக்ஷ்மி தானே சமைத்து மற்றவர்களுக்கு பரிமாறவும் செய்வாள்’’ என்பார்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : காபி தாளம் : ஆதி

**பல்லவி**

*ஸத்குருபாதுகாம் ப்ரணமாம்யஹம் - ஸதா (ஸத்குரு)*

**சரணங்கள்**

*சங்கரவம்ச சந்த்ரசேகர யதி பாதுகாம்*
*ஸர்வஜன மோஹித குரு பாதுகாம்*
*ஸம்ஸார தாபஹரண ரிஷி பாதுகாம்*
*ஸர்வ அபயப்ரதான அனுக்ரஹ பாதுகாம் (ஸத்குரு)*

*காமயே நாஹம் தீர்த்த ஸ்நாநம்*
*காமயே நாஹம் க்ஷேத்ர யாத்ராம்*
*காமயே நாஹம் ஸாக்ஷாத்காரம்*
*காமயே தவ ஏவ பாதுகா ஸாமீப்யம் (ஸத்குரு)*

*ஸ்ரீ ராகவபாதுகா பூஜக பரத ஸ்மாரக-*
*ஸ்ரீதர முரளீதர ஸதா பணிதம் (ஸத்குரு)*

**நாமாவளி**

*மானஸ பஜரே குரு சரணம்*
*துஸ்தர பவ ஸாகர தரணம்*

---

## ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலத்திலிருந்து ஒரு முக்கிய அறிவிப்பு

நமது ஸாந்தீபனி குருகுலத்தில் வரும் 2004-2005 வருடத்திற்கு ஸாமவேத வித்யார்த்திகள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

யஜுர்வேதத்திற்கு, இந்த வருடம் வித்யார்த்திகள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

- Trustees

**Sri Sandeepani Gurukulam**

நமது வீட்டில், காய்கறிகளை நறுக்கியபின், வேண்டாத பகுதிகளை, வீட்டுத் தோட்டத்தில் தூக்கி எறிவோம். அப்படி எப்பொழுதோ தூக்கி எறிந்த காய்கறிகளின் விதைகள் திடீர் என்று ஒரு நாள் முளைக்க ஆரம்பிக்கும். அதுபோல், பகவந்நாமாவை ஒரு பலனை உத்தேசித்து நாம் சொன்னோமானால், இன்று இல்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் அதன் பலன் வந்தே தீரும் என்பார் பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்.

இந்த வருடம் தமிழ்நாடு முழுவதும் வறட்சியால் வாடுவதைக் கண்ட நம் ஸ்வாமிஜி, மழையை உத்தேசித்து, ஆங்காங்கு பக்தர்களை பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துவர சொல்லியிருந்தார்கள். முதலில், சிவகாசியில் ஏழு நாட்கள், ''ஹரே ராம...'' மஹாமந்திர கீர்த்தனம் செய்யப்பட்டது. மதுரையில் நாற்பத்தியெட்டு நாட்கள் ஒரே இடத்தில், 'யோகி ராம்சுரத்குமார்' நாமகீர்த்தனம் செய்யப்பட்டது. சென்னையில், பிரேமிகபவனத்தில் இரண்டுமுறை, ''ஹரே ராம...'' 'மஹாமந்திர' நாமகீர்த்தன ஸப்தாஹம் நடத்தப்பட்டது. சென்னையில், ''யோகி ராம்சுரத்குமார்...'' நாமகீர்த்தனம் நாற்பத்தி எட்டு நாட்கள், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்தர் வீட்டில் தொடர்ந்து நடைபெற்றது. கஞ்சன்காடு ஆனந்தாஸ்ரமம், பப்பா ராமதாஸ் பக்தர்களால், சென்னையில் ஒரே இடத்தில், நாற்பத்து எட்டு நாட்களுக்கு, 'ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜய ராம்' நாம கீர்த்தனம் செய்யப்பட்டது. சென்னை நங்கநல்லூரில், கோகுலம் மண்டலியினரால், ஏழுநாட்கள், ''ஹரே ராம...'' மஹாமந்திர நாம ஸப்தாஹம் நடைபெற்றது.

இதைத் தவிர தமிழ்நாடு முழுவதும், நகரங்கள், கிராமங்கள் உள்பட பல இடங்களிலும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் பக்தர்களால் நிரந்தர ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் பலனாக, கோடையில் அதுவும் குறிப்பாக

அக்னி நட்சத்திரத்தில், தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்து எல்லோருக்கும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. இது பகவந்நாமத்தின் பெருமையை நிதர்சனமாக உணர்த்துவதாக அமைந்து உள்ளது.

சென்னை நங்கநல்லூரில், ''ஹரே ராம...'' மஹாமந்திர நாம ஸப்தாஹத்தின் பூர்த்தி தினத்தன்று (10.03.2004) ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸத்தில் கூறிய வரிகளை இங்கு நினைவு கூறுகிறோம்.

''மழை வரவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். இந்த வருடம் ஸம்ருத்தியாக (வேண்டிய அளவிற்கு) மழை பெய்யும். அதுவரையில், நாமும் பகவானை விடுவதாக இல்லை. பகவானின் க்ருபையாலும், குருவின் க்ருபையாலும் இங்கு ஏழு நாட்களுக்கு ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. உலகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் க்ஷேமம் ஏற்படும். மழை பெய்யும்.

இங்கு, நாம ஸப்தாஹம் ஏழு நாட்களுக்கு ''நாமகீர்த்தனம்'' செய்தோம் என்றில்லாமல், ஒவ்வொருவரும் அவர்களது வீட்டில் சமைக்கும்பொழுதும், வேலை செய்யும்பொழுதும், பஸ்ஸிற்கு நிற்கும்பொழுதும், ரயிலில் போகும்பொழுதும், ஸதா ஸர்வகாலமும் உங்கள் வாக்கில் பகவன்நாமா வந்துகொண்டே இருக்க, பகவான் அனுக்ரஹம் செய்வார்'' என்றார்கள்.

''மேன்மேலும், நாம் தொடர்ந்து நாமகீர்த்தனம் செய்து வருவோம். எல்லோரையும் நாமகீர்த்தனம் செய்யச் செய்வோம். இதன் மூலமாக, ஆன்மீகத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் பாரத தேசத்தை தட்டி எழுப்புவோம். ஆன்மீக சக்திகளை ஒருங்கிணைப்போம். வன்முறை ஒழியட்டும். தேச ஒற்றுமை ஓங்கட்டும். சாந்தி எங்கும் நிலவட்டும். பாரத தேசம் எந்த இக்கட்டையும் எதிர்கொள்ளாமல் இருக்கட்டும். நம்முடைய தேசம் இயற்கை வளங்களை பெற்று விளங்கட்டும். செல்வம் கொழிக்கட்டும். மக்கள், நோய்நொடி இல்லாமல் சந்தோஷமாக வாழட்டும். சுருங்கச் சொன்னால் மஹான்கள் ஆசைப்பட்ட ராம ராஜ்யம் விரைவிலேயே மலரட்டும்'' என்றும் ஸ்ரீ ஸ்வாமிஜி கூறினார்கள். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : மஹான்களுடைய புகைப்படத்தை (போட்டோ) வைத்து வழிபடுவதால் பலன் ஏற்படுமா?*

பதில் : மஹான்களுடைய புகைப்படங்கள் அவர்களுடைய தெய்வீகத் தன்மையுடன் கூடியது. அதை தியானம் செய்ய செய்ய அதனுடைய தெய்வீகத் தன்மை அதிகரிக்கும். தவம் செய்து வருபவர்களை அதிகமாக புகைப்படம் எடுத்தாலோ, அல்லது அதிகமாக வீடியோ எடுத்தாலோ அவர்களுடைய தவம் குறையும். பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்கள், யாருக்காவது உடல்நிலை சரியில்லை என்றால் அவர்களுடைய புகைப்படத்தை தன் அருகாமையில் வைத்து ஜபம் செய்துகொண்டே தடவிக் கொடுப்பார்கள். அவர்களுக்கு உடல்நிலை சரியாகிவிடும். இப்படி பலமுறை நடந்துள்ளது. மஹான்களும் மஹான்களுடைய படமும் வேறல்ல.

*கேள்வி : நமக்கு பக்குவம் வந்துவிட்டது என்பதற்கு எது அளவுகோல்?*

பதில் : பிறருடைய வளர்ச்சியையும், புகழையும் கேட்டு முதலில் பொறாமை ஏற்படக்கூடாது. அடுத்ததாக எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது. அதற்கும் மேலாக மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். அதுவும், நாம் எந்த துறையை சேர்ந்தவர்களாக இருக்கின்றோமோ, அந்த துறையை சேர்ந்தவர்களிடமே இத்தகைய மனோநிலை ஏற்படவேண்டும்.

*கேள்வி : ஜீவன்முக்தர்களான ஞானிகளும் கூட மற்றவர்களைபோல் எல்லாவிதமான உணவு வகைகளையும் சாப்பிடுகின்றார்களே?*

பதில் : இதே கேள்வியை ஒரு பக்தர், பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரிடம் கேட்டார். அதற்கு ஸ்ரீ ராமக்ருஷ்ணர், ''என்னுடைய மனதோ எப்பொழுதும் சமாதியிலேயே நிலைத்து இருக்கின்றது. இது

மாதிரியான உணவு வகைகளை உட்கொள்வதால்தான் என்னுடைய மனது சிறிதளவாவது உலக நினைவிற்கு வருகின்றது. அப்படி வருவதால்தான், நீ இப்பொழுது கேட்ட கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடிந்தது'' என்றார்.

*கேள்வி : தியானம் செய்யும் எனக்கு தியானம் நன்றாக கைகூட நீங்கள் சொல்வது என்ன?*

பதில் : சரியான உணவு பழக்கங்கள், உடல் பயிற்சி, தூய்மையாக இருத்தல் இவற்றினால் சரீரம் ஆரோக்கியமாக இருக்கும். நேர்மையான வாழ்க்கை, சத்யம், அஹிம்சை, பொறுமை இவற்றினால் மனது ஆரோக்யமாக இருக்கும். இப்படி ஆரோக்யமான சரீரத்துடனும் மனதுடனும் சாதனை பழக ஆரம்பிக்க வேண்டும். ப்ரஹ்மச்சர்யத்தால்தான் மனது ஒருமுகப்படும். குறைந்த அளவு ஸாத்வீகமான ஆகாரம் உட்கொள்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு ப்ரஹ்மச்சர்யத்தை கடைபிடிப்பது இயலாது.

*கேள்வி : எனக்கு மீரா, தியாகராஜர் போன்ற பல மஹான்களின் சரித்ரத்தை படிக்கும்பொழுதும் கேட்கும்பொழுதும் பகவானைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வருகின்றது. வேதாந்த ச்ரவணம் செய்யும்பொழுது முக்தி அடைய வேண்டும் என்று தோன்றுகிறது. என்ன செய்ய வேண்டும்?*

பதில் : பகவானைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையே உயர்ந்தது. அப்படி பகவானை பார்த்துவிட்டால், அவருடைய அருளால் முக்தியும், உடனே கைகூடிவிடும். அப்படி பகவானைப் பார்ப்பதற்கு அவனுடைய நாமத்தை இடைவிடாமல் சொல்லுவதே சுலபமான வழி.

*கேள்வி : எனக்கு இறைவன் இருக்கின்றானா? இல்லையா? என்ற ஒரு ஸந்தேகம் எப்பொழுதும் இருந்து வருவதற்கு காரணம் என்ன?*

பதில் : மதுபழக்கம், காமம், பேராசை உள்ள இதயங்களில் இறைவனைப் பற்றிய முழு நம்பிக்கை உதயமாகாது என்பது மஹான்களின் வாக்கு.

# வேத கதைகள் - 84

– தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## உபஸ்தானம்

பகற்பொழுது, தேவர்களுக்கு உரியது. இரவு, அரக்கர்களுக்கு உரியது. அரக்கர்கள் இரவில்தான் நடமாடுவார்கள். ஆதலால்தான் அரக்கர்களுக்கு நக்தஞ்சரர்கள் என்று பெயர் ஏற்பட்டது. ஒரு சமயம், அரக்கர்கள், தேவர்களால் முன்பு அடையப்பட்ட பசு முதலிய செல்வங்களையும், பிறகு அடையப்படவேண்டிய செல்வங்களையும் கவர்ந்து அந்த செல்வங்களோடுகூட இரவில் இருட்டில் எங்கோ ஒளிந்தனர். செல்வம் அற்றதால் வருந்திய தேவர்கள், செல்வங்களை அடையவேண்டி அதற்கு உரிய உபாயத்தைக் கண்டனர்.

இரவில் அக்னிக்கு ஒளி அதிகமாக இருப்பதால் இரவு அக்னியைச் சார்ந்தது. ''பசு முதலிய செல்வங்கள் அக்னியைச் சார்ந்தவைகள். அக்னியைத் துதித்தால், அரக்கர்களால் கவரப்பட்டு, இரவில், இருட்டில் ஒளித்து வைக்கப்பட்ட பசு முதலிய செல்வங்களை அக்னி கண்டுபிடித்து நமக்கு அளிப்பார்'' என்றும் தீர்மானித்தனர். அக்னியைத் துதித்தனர். துதிக்கப்பட்ட அக்னியும், தன் வெளிச்சத்தால், இரவில் இருட்டில் ஒளித்து வைக்கப்பட்ட பசு முதலிய செல்வங்களை, இரவு இருட்டிலிருந்து வெளிச்சமான பகலுக்கு கொண்டு வந்தார். பகல் தேவர்களைச் சார்ந்ததால், அரக்கர்களால் கவரப்பட்ட தங்கள் செல்வங்களை தேவர்கள் அடைந்தனர். தேவர்கள் பசுக்களை அடைந்து விரும்பிய போகங்களைப் பெற்றனர்.

ஒரு சமயம், அக்னியானவர் இவ்வுலகில் இருந்தார். பிறகு சொர்க்கத்தை விரும்பி சொர்க்கலோகம் சென்று அங்கேயே இருந்துவிட்டார். அந்த சமயம், சூர்யன் இந்த பூவுலகில் இருந்தான். சூர்யன் இங்கு இருந்ததால் நல்ல வெளிச்சம் இருந்தது. ஆனாலும், சூர்ய வெப்பத்தைத் தாங்க முடியாமல் மனிதர்கள் அதிக துன்பத்தை அடைந்தனர். அக்னி இங்கு இல்லாததால் சமையல் செய்வதற்கு

முடியாமல் தவித்தனர். மேலுலகில் சூர்யன் இல்லாததால் போதிய வெளிச்சம் இல்லாமல் தேவர்களும் துன்பம் அடைந்தனர்.

அந்த சமயம், அக்னியும் தான் பூலோகம் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டார். அக்னியின் ஆசைப்படி ப்ரஜாபதியானவர் அக்னியை பூமிக்கு அனுப்பி சூர்யனை சொர்க்கத்தில் நிலை நிறுத்தினார். இவ்விதம் மாற்றியதால் தேவர்களுக்கும் போதிய வெளிச்சம் கிடைத்தது. மனிதர்களுக்கும் சமையல் செய்ய அக்னி கிடைத்தது.

பூமிக்கு வந்த அக்னியானவர், இந்த பூமியில் ம்ருத்யுவிடமிருந்து பயந்தார். ஏனென்றால், இந்த பூமியானது எப்பொழுதும் ம்ருத்யுவின் ஆளுகைக்கு உட்பட்டது. இவ்விதம், ம்ருத்யுவிடமிருந்து பயந்த அக்னியானவர், மறுபடியும் மேல் உலகம் செல்ல உபாயத்தைத் தேடினார். ம்ருத்யுபயம் இல்லாமல் இருக்க ஆலோசனை செய்தார். அதனை பின்பற்றி மேலுலகம் சென்றார். மேலுலகிலுள்ள சூர்யனும் மறுபடியும் பூமிக்கு வந்தார். பூமிக்கு வந்த சூர்யனுக்கும் ம்ருத்யு பயம் ஏற்பட்டது. மேலுலகம் சென்றால்தான் ம்ருத்யுபயம் இல்லாமலிருக்கும். அக்னியைத் துதித்தால் ம்ருத்யு பயத்திலிருந்து விடுபட்டு மேலுலகம் செல்லலாம் என்று தீர்மானித்து அக்னியைத் துதித்து, மேலுலகம் சென்று, எமபயத்திலிருந்து விடுபட்டார். அக்னியைத் துதிப்பதுதான் உபஸ்தானம் என்று பெயர். இவ்விதம், தினந்தோறும் அக்னிஹோத்ரம் செய்தபிறகு அக்னியைத் துதிப்பதற்கான மந்த்ரங்களால் உபஸ்தானம் செய்ய வேண்டும். உபஸ்தானம் இவ்வித பெருமை பெற்றது.

---

*''பற்றில்லாதவன் மட்டுமே இறைவனைக் காண்பான். விருந்தினரின் வீட்டிற்குச் சென்று சாப்பிட்டபிறகு வெறும் கையுடன் திரும்பும் ஒருவன் இறைவனுக்கு அருகில் அமர்ந்திருக்கிறான்.''*

**– ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்**

# எந்தரோ மஹானுபாவுலு - 74

பக்தர்கள் மூலமாக நிமாயி, ஸன்யாஸ தர்மத்தை மேற்கொள்ளப் போகிறார் என்பதைக் கேட்ட சசீமாதாவின் சோகம் எல்லையற்றதாக ஆயிற்று. கள்ளம் கபடமற்ற வெகுளியான அந்த தாய்க்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கிட்டத்தட்ட பித்துப்பிடித்த நிலையை அடைந்தாள். விம்மிவிம்மி அழுதுகொண்டு தைரியத்தைத் திரட்டிக்கொண்டு மஹாப்ரபுவிடம் வந்து தழுதழுத்த குரலில், ''குழந்தாய் நிமாயி! நான் கேள்விப்பட்டது எல்லாம் எவ்வளவு தூரம் உண்மை?'' என்று கேட்டாள்.

ப்ரபு, ''என்ன விஷயம்'' என்று ஒன்றும் தெரியாதது போல் கேட்டார். அன்னை, என்ன பதில் சொல்வாள். பாவம்; ''மகனே! அதை நான் எப்படி என் வாயால் சொல்வேன்! என்னைப் போன்ற துர்பாக்யமுள்ள விதவைத் தாயின் தலையில் ஆண்டவன் இன்னும் என்னவெல்லாம் எழுதியுள்ளானோ! தெரியவில்லையே! விச்வரூபன் வீட்டை விட்டுச் சென்றபோது நான் பட்ட வேதனையே இன்னும் தீரவில்லை! அதற்குள், உன் தகப்பனாரும் என்னை விட்டுச் சென்று விட்டார். அந்த பயங்கரமான துக்கத்தை, உன் தாமரை போன்ற மலர்ந்த முகத்தைப் பார்த்துதான் தணித்துக்கொள்கிறேன். துக்கம் ஏற்பட்டாலும், உன் முன் அழாமல், மறைந்துகொண்டுதான் அழுவேன். ஏனென்றால், நான் அழுவதைப் பார்த்து உன் முகம் வாடக்கூடாதே என்ற கவலைதான். இப்பொழுது பக்தர்கள் மூலமாக நீயும் என்னை ஏமாற்றிவிட்டு செல்ல விரும்புவதாக அறிந்து கொண்டேன். இது உண்மையா மகனே?'' என்று வினவினாள்.

அன்னையின் கருணையான வார்த்தைகளைக் கேட்டு ப்ரபு மௌனமாக இருந்தார். கண்களை படபடத்துக்கொண்டு தரையை நோக்கினார். முகத்தில் சோகம் சூழ்ந்தது. அன்னையின் கவலை அதிகரித்தது. பயந்துகொண்டே, 'நிமாயி! ஏன் மௌனமாக இருக்கிறாய்? உண்மையை மறைக்காதே, என்னிடம் ஒளிவில்லாமல் விஷயத்தைச் சொல்' என்று கருணையுடன் கேட்டாள்.

மெதுவாக ப்ரபு, ''அன்னை கேள்விப்பட்டது உண்மைதான்'' எனச் சொன்னார். இதைக்கேட்ட அன்னையின் துக்கத்தை எழுத எந்த எழுத்தாளரின் எழுதுகோலுக்கும் சாமர்த்தியம் வரவே வராது.

அன்னையின் கண்கள் ஜீவநதியைப் போல் கண்ணீரைப் பெருக்கின. அவள் வஸ்திரங்கள் நனைந்தன. ''மகனே! உன்னை நான் போகாதே என தடுத்தால் நீ கேட்கப் போவதில்லை. ஒரே ஒரு வேண்டுகோள். எனக்கு விஷத்தை வாங்கித் தந்துவிட்டு போ, உன்னை விட்டால் எனக்கு யார் இருக்கிறார்கள்! நான் யாரை விஷம் வாங்கித் தர அனுப்புவேன்? பாவம் விஷ்ணுப்ரியா! இன்னும் வெகுளியான குழந்தை! சிறு பெண்! காசை வைத்துக்கொண்டு கடைக்குப்போய் ஒரு பொருள் வாங்கியதில்லை. அப்படியே அவளை அனுப்பினாலும் கடைக்காரன், அவள் சிறு பெண்ணென்று அவளிடம் விஷம் தரமாட்டான். நீ போய்விட்டால், பக்தர்களும் இங்கு என் உதவிக்கு வரமாட்டார்கள். எனவே, நீயே இந்த கார்யத்தை செய்துவிட்டுப்போ! உன்னை ஒன்பது மாதம் கர்ப்பத்தில் தரித்தேன் அல்லவா! அந்த உறவிற்காகவாவது இந்த உதவியைச் செய். கங்கையில் விழுந்து உயிரைப் போக்கிக் கொள்வேன். ஆனால், யாராவது தயை உள்ளவர்கள் என்னைக் காப்பாற்றிவிடுவார்கள். எனக்கு விஷம் ஒன்றுதான் இப்பொழுது ஒரே கதி'' என்று சொல்லிக்கொண்டே நினைவிழந்து பூமியில் விழுந்தாள்.

ப்ரபு தன் கைகளால் துக்கமடைந்த அன்னையைத் தூக்கி அவள் உடலில் ஒட்டிக்கொண்டிருந்த தூசியைத் தன் வஸ்திரத்தால் துடைத்துவிட்டு, ''அம்மா! நீ என்னை உன் கர்ப்பத்தில் சுமந்திருக்கிறாய். என் மல மூத்திரத்தை துடைத்திருக்கிறாய்! என்னைக் கொஞ்சி, பாலூட்டி வளர்த்து படிக்க வைத்திருக்கிறாய்! இந்தக் கடனையெல்லாம் நான் எப்படியாவது இறக்கி வைத்துக்கொள்ள முடியுமா? என் தோலை உரித்து செருப்பாக்கி அணிவித்தாலும் நான் இந்தக் கடனை அடைக்க முடியாது. நான் ஜன்ம ஜன்மமாக உனக்கு கடனாளியாக இருப்பேன். இது சத்தியம்! இது சத்தியம்! ஆனால், என் மனம் என் வசத்தில் இல்லையே! நான் இப்படிச் செய்தே தீரவேண்டும்'' என்றார். மேலும், ''நீ வீரமான தாயல்லவா! விச்வரூபனைப் போன்ற மஹாபுருஷனை ஈன்றெடுத்துள்ளாய். நீ இப்படி அழுவது உனக்கு

அழகல்ல. துருவனின் அன்னை தனது ஐந்து வயதான ஒரே குழந்தையை தபஸுக்கு அனுப்பவில்லையா? அன்னை கௌசல்யா மருமகளுடன் ஸ்ரீ ராமச்சந்திர பகவானை வனவாஸத்திற்கு அனுப்பவில்லையா? அன்னை சுமித்திரா, இளம் மருமகளை வீட்டில் வைத்துக்கொண்டு லக்ஷ்மணனை ராமனுடன் அனுப்பவில்லையா? அன்னை மதாலஸா தன் அனைத்து புத்ரர்களுக்கும் ஸன்யாஸ தர்ம தீக்ஷை அளித்து வழியனுப்பவில்லையா? நீ என்ன இந்த அன்னைமார்களைவிட எந்த விதத்தில் குறைந்தவள்? உன் சரணங்களில் எனது கோடி கோடி ப்ரணாமங்கள். எனது கார்யத்தில் புத்ரபாசம் என்ற தடையை ஏற்படுத்தாமல் பரஸன்னமாக என்னை ஸன்யாஸம் ஏற்க அனுமதித்து ஆசீர்வதித்து விடு'' என்று உருக்கமாக பேசினார்.

அன்னையும் கண்களை துடைத்துக்கொண்டு, 'மகனே! நான் இன்று வரை உன் காரியத்திற்கு ஏதும் தடை சொன்னதில்லை. ஆனால், உன்னைக் காணாமல் என்னால் இருக்க முடியாது. வீட்டிலிருந்துகொண்டே, பகவத் பஜனம் செய்ய முடியாதா? இங்கே இருந்துகொண்டே ஸ்ரீவாஸ், கதாதர், முகுந்ததத், அத்வைதாச்சாரியர் போன்ற பக்தர்களுடன் இரவு பகலாக பஜனை செய்யேன்! இந்தக் குழந்தை விஷ்ணுப்ரியாதான் என்ன செய்வாள் என்று யோசித்தாயா? இவள் இதுவரை எந்த சம்சார சுகத்தையும் அனுபவிக்கவில்லை. நீயின்றி அவள்தான் எப்படி உயிர் வாழ்வாள்? எனக்குத்தான் கல் போன்ற இதயம். அது விஸ்வரூபன் போன போதும், உன் தந்தை இறந்துபோன போதும் உடையாமல் இருக்கிறது. நீ போனாலும்கூட அது உடையாது போல் தோன்றுகிறது. விஷ்ணுப்ரியா வாழ்வதற்கான ஆதாரம் ஏற்பட்டதும், நான் இறந்தபிறகும் நீ சன்யாஸம் மேற்கொள்ளக்கூடாதா? நான் இருக்கும்போது விஷ்ணுப்ரியாவை நீ உயிருடன் இருந்துகொண்டே விதவைபோல் தவிக்கவிட்டு போவது சரியில்லை. நீ ஜகத் உத்தாரண காரியம் செய்கிறேன் என்கிறாயே! அன்னையைத் தவிக்கவிட்ட பாபம் உன்னைத் தீண்டாதா'' என்று கேட்டாள்.

ப்ரபு தைரியத்துடன் கூறினார், ''அன்னையே! விதியை மாற்றும் சாமர்த்தியம் என்னிடம் இல்லை. இத்தனை காலம் வரைதான் உனக்கும் எனக்கும் உறவு எழுதியுள்ளது. ஆயிரம்

முயற்சித்தாலும் இனி என்னால் வீட்டில் இருக்க முடியாது. பகவான் வாசுதேவன் அனைவரையும் ரக்ஷிப்பான். ஜகத்தை ரக்ஷிக்கும் பொறுப்பும், பாரமும் அவனுக்குத்தான் உள்ளது. நீ மனதிலிருந்து மோகத்தை அகற்றிவிட்டு ப்ரேமை நிரம்பிய மனதுடன் எனக்கு யதிதர்மத்தை ஏற்க அனுமதி அளிக்க வேண்டுகிறேன்'' என்றார்.

அழுதுகொண்டே, அன்னை கூறினாள். ''மகனே! குழந்தையிலிருந்து உன் ஸ்வபாவத்தை அறிவேன்! நீ எது சரி என்று நினைக்கின்றாயோ அதையே செய்வாய்! ப்ரும்மாவால் கூட அதை மாற்ற முடியாது. சரி உனக்கு எதில் சந்தோஷமோ, அதையே செய்'' என்றார். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---


ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அ த உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமண_ன் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமண_ன் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org" or Contact 044-23710110

# பாலகர்களுக்கு ஒரு கதை - 78

சங்கரன், பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பான். புத்திசாலியும்கூட. நல்ல குணங்கள் உடையவன். ஆனாலும், மிகவும் சோம்பேறி. காலையில் எட்டு மணிக்குத்தான் எழுந்துகொள்வான். தன்னுடைய வேலைகளைக்கூட எதுவும் செய்யமாட்டான். அவனுடைய பள்ளிக்கூட புத்தகங்களை எடுத்து வருவதற்குகூட அவனுக்கு ஆள் வேண்டும். அன்னத்தைக்கூட யாராவது வாயில் ஊட்டிவிட்டால் தேவலை என்றிருப்பான். சோம்பேறியாக இருந்தபோதிலும் நல்ல புத்திசாலியாக இருப்பதால் தேர்வில் போதுமான மதிப்பெண்கள் வாங்கி அடுத்த வகுப்பிற்குச் சென்றுவிடுவான். ஆனாலும் அவனுக்கு, தான் வகுப்பில் முதலாவதாக வரவில்லையே! என்ற குறை இருந்தது. நன்றாக மதிப்பெண் எடுத்து தேர்வில் வெற்றிப் பெற்று மருத்துவப்படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அவனிடம் இருந்தது.

ஒருநாள், அந்த பள்ளிக்கூடத்திற்கு, ஒரு ஸாது வருகை தந்தார். அவர், பள்ளி மாணவர்களுக்கு உபதேசம் செய்யும்பொழுது, ''குரு அருளால் உலகத்தில் அடைய முடியாததே இல்லை. குரு அருள் இருந்தால் நாம் நினைத்ததெல்லாம் கைகூடும்'' என்று கூறியதைக் கேட்டவுடன் நம்முடைய சங்கரன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. நாமும், வாழ்க்கையில் எப்படியாவது ஒரு குருவை அடைந்துவிட்டால் போதும். சுலபமாக முதல் மாணவனாக தேறி பெரிய படிப்பும் படித்து மருத்துவராகிவிடலாம் என்று நினைத்தான்.

சரி! குருவை எப்படி அடைவது? அவனுடைய வீட்டின் பக்கத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய கோவில் உள்ளது. அந்த கோவிலுக்குச் சென்று ஸ்ரீ க்ருஷ்ணனிடம், தனக்கு ஒரு தகுந்த குருவைக் காண்பித்துக்கொடுக்குமாறு பிரார்த்தித்து வந்தான். அவன் பிரார்த்தனைக்கு இணங்கி பகவான் க்ருஷ்ணர், அவனுடைய கனவில் தோன்றினார். ''உன்னுடைய பிரார்த்தனையை செவிமடுத்தேன். உனக்கு ஒரு நல்ல குருவை காண்பித்துக்கொடுக்கவே வந்துள்ளேன்'' என்றார். சங்கரனும் 'யார் அந்த குரு?' என்று கேட்க, ''உன்னுடைய வீட்டில் தினமும் வேலை செய்கின்றாளே, அந்த சரசுதான் உன்னுடைய குரு என்று கூறி மறைந்துவிட்டார். குரு என்றால்

எப்படியோ என்று நினைத்திருக்க, க்ருஷ்ணனோ இப்படி சொன்னது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும், இறைவன் சொன்னால் அதில் ஏதோ பொருள் இருக்கும் என்று அவளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான்.

காலையில் 5 மணிக்கு எழுந்திருக்கும் அவள், சங்கரனுடைய வீடு மற்றும் சில வீடுகளையும், பெருக்கி கோலம் போட்டு, பாத்திரங்களைத் துலக்கி, துணிகளைத் துவைத்து முடிப்பாள். பிறகு, அந்த வீட்டில் உள்ளவர்கள் கொடுக்கும் உணவை உண்டுவிட்டு, பேருந்தை பிடிக்க கிளம்பி விடுவாள். கட்டிட வேலையில், சிமெண்ட், மணல் இவைகளை தூக்கி வேலை செய்துவிட்டு, இரவு மீண்டும் தன்னுடைய வீட்டிற்கு வந்து அங்கு வேலைகளை எல்லாம் செய்துவிட்டு, பிறகு வேலை செய்ய சங்கரன் வீட்டிற்கும், அவனுடைய நண்பர்கள் வீட்டிற்கும் வந்துவிடுவாள். பாத்திரங்கள் எல்லாம் துலக்கிவிட்டு அவள் படுப்பதற்கு செல்ல இரவு பத்தரை மணிக்குமேல் ஆகிவிடும். அப்பொழுதும் எங்கு படுத்துக்கொள்வாள் தெரியுமா? நிறுத்தி வைத்திருக்கும் காருக்கு பக்கத்தில். அந்த இடத்தில் எந்த படுக்கையும் கிடையாது. காற்று வசதியும் கிடையாது. கொசு கடிக்கும். அந்த இடத்திலும் நன்றாக தூங்கிவிடுவாள்.

இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்த சங்கரனுக்கு வியப்பாக இருந்தது. இவ்வளவு வேலை செய்யும் அவளுக்கு யாரும் சத்தான உணவுகூட கொடுப்பதில்லை. ஆறுதலாக பேசுவதற்குகூட யாரும் இல்லை. எல்லோரும் அவளை அதிகாரம் செய்து வேலை வாங்குவார்களே தவிர அன்புடன் பேசமாட்டார்கள். இப்படி இருக்கையில், அவள் எப்பொழுதும் சிரித்துக்கொண்டு, மலர்ந்த முகத்துடனே காணப்படுவாள். இவைகள் எல்லாம் சங்கரனுடைய வாழ்க்கையில் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணிவிட்டது. இப்பொழுதெல்லாம் சங்கரன், காலையில் ஐந்து மணிக்கே எழுந்து விடுகின்றான். தன் வேலையை தானே பார்த்துக்கொள்கிறான். நன்றாக படிக்கின்றான். அவனுடைய உறவினர்களெல்லாம் இந்த மாறுதல்களுக்கான காரணம் புரியாமல் விழித்தனர். ஆனால், அதற்கான காரணம் நமக்கும் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கும் மட்டும்தானே தெரியும்.

*அருணாசல சிவ* *ஸ்ரீ குருப்யோ நம:* *ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்*

# பகவான் யோகிராம்சுரத்குமார் அதிஷ்டான நூதன ஆலய மஹாகும்பாபிஷேகம்

**பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், செங்கம் சாலை, திருவண்ணாமலை**

**27.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிக்கு**

## யாகசாலை நிகழ்ச்சி நிரல்

*23.06.2004 புதன்கிழமை - மாலை : 6.00 மணி*

**அனுக்ஞை, புண்யாஹவாசனம், ம்ருத்சங்க்ரஹணம், வாஸ்து சாந்தி**

*24.06.2004 வியாழக்கிழமை*

காலை: 7.00 மணி
**யாகசாலை முதல்காலம்**

மாலை: 5.00 மணி
**யாகசாலை இரண்டாம் காலம்**

*25.06.2004 வெள்ளிக்கிழமை*

காலை: 7.00 மணி
**யாகசாலை மூன்றாம் காலம்**

மாலை: 5.00 மணி
**யாகசாலை நான்காம் காலம்**

*26.06.2004 சனிக்கிழமை*

காலை: 7.00 மணி
**யாகசாலை ஐந்தாம் காலம்**

மாலை: 5.00 மணி
**யாகசாலை ஆறாம் காலம்**

*27.06.2004 ஞாயிற்றுக்கிழமை*

காலை: 7.00 மணி
**யாகசாலை ஏழாம் காலம்**

*27.06.2004 காலை 9.45 மணிக்கு*

**மஹாபூர்ணாஹுதி, யாத்ராதானம், கடம் புறப்பாடு மற்றும் ''சிம்மலக்னத்தில்'' மஹா கும்பாபிஷேகம்**

மாலை : 2.00 மணி - மஹாஅபிஷேகம் மற்றும் சகஸ்ர கலஸாபிஷேகம்
இரவு : 7.00 மணிக்கு வெள்ளிரதத்தில் ஸ்ரீ பகவானின் திருவுருவசிலை திருவீதிஉலா

விழா நாட்களில் வேத, இதிஹாஸ, புராண, திருமுறை பாராயணம், மற்றும் நாமஸங்கீர்த்தனம் நடைபெறும்.

தினமும், மதியவேளையில் பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் பக்தர்களின் ஸத்ஸங்கம் நடைபெறும்.

## கும்பாபிஷேக சிறப்பு நிகழ்ச்சிகள்

*24.06.2004 வியாழக்கிழமை*

மாலை : 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

**தஞ்சை திருமதி. கமலாமூர்த்தி அவர்களின் -**
**''சுபத்ரா கல்யாணம்'' ஹரிகதா**

*25.06.2004 வெள்ளிக்கிழமை*

மாலை : 3.00 மணி முதல் 6.00 மணி வரை

**''இறை இசை தென்றல்'' திரு. வீரமணி ராஜு**
**மற்றும் எட்டாம் படை வீடு திருமுருகனடியார்களின்**
**பஜனேஸ்வரா நாமசங்கீர்த்தனம்**

மாலை : 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

**''முத்தமிழ் பேரரசி'' டாக்டர் ஸ்ரீமதி சரஸ்வதி ராமநாதன் அவர்களின்**
**''அருணாச்சல மகிமை'' சொற்பொழிவு**

*26.06.2004 சனிக்கிழமை*

மாலை : 4.00 மணி முதல் 6.00 மணி வரை

**''கலைமாமணி'' ஸ்ரீமதி சுதா ரகுநாதன் அவர்களின்**
**கர்நாடக சங்கீத கச்சேரி**

மாலை : 6.30. மணி முதல் இரவு 7.00 மணி வரை

**''திருக்கோவிலூர் தபோவனம்''**
**ஸ்ரீ ஸ்ரீ நித்யானந்தகிரி ஸ்வாமிகளின் அருளுரை**

இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை

**''பரனூர் மஹாத்மா''**
**ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் உபந்யாஸம்**

இரவு : 9.00 மணிக்கு மேல்

**கோவிந்தபுரம் ஸ்ரீ பாண்டுரங்க பஜனாஸ்ரமம் ஸ்தாபகர்**
**''விட்டல்தாஸ்'' ஸ்ரீ ஜெயக்ருஷ்ண தீக்ஷிதர் அவர்களின்**
**திவ்யநாம ஸங்கீர்த்தனம்**

*27.06.2004 ஞாயிற்றுக்கிழமை*

மாலை : 5.00 மணி முதல் 7.00 மணி வரை

**சென்னை ''ஸ்ரீதேவி நருத்யாலயா'' குழுவினரின்**
**''பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களின்**
**வாழ்க்கை வரலாறு'' - நாட்டிய நாடகம்**

## மண்டலாபிஷேக நிகழ்ச்சி நிரல்

**தினமும் காலை 8.00 மணிக்கு மண்டலாபிஷேகம்**

| நாள் & நேரம் | நிகழ்ச்சிகள் |
| --- | --- |
| 28.06.2004 to 04.07.2004<br>6.00p.m. - 8.00p.m. | கடையநல்லூர் ஸ்ரீ கணபதி துக்காராம் அவர்களின் 'பக்த விஜயம்' உபந்யாஸம் |
| 05.07.2004 to 11.07.2004 | சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ சுந்தரராம தீக்ஷிதர் அவர்களால் |
| 6.00 a.m. - 11.00 a.m. | ஸ்ரீமத்பாகவதம் மூலபாராயணம் |
| 6.00 p.m. - 8.00 p.m. | ஸ்ரீமத்பாகவதம் உபந்யாஸம் |
| 12.07.2004 to 20.07.2004 | ப்ரும்மஸ்ரீ தாமோதர தீக்ஷிதர் அவர்களால் |
| 6.00 a.m. - 11.00 a.m. | ஸ்ரீமத் ராமாயண மூலபாராயணம் |
| 6.00 p.m. - 8.00 p.m. | ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம் |
| 21.07.2004 to 23.07.2004<br>6.00 p.m. - 8.00 p.m. | நாகை ஸ்ரீ முகுந்தன் அவர்களின் சொற்பொழிவு |
| 24.07.2004 to 26.07.2004<br>6.00 p.m. - 8.00 p.m. | ஸ்ரீமதி இளம்பிறை மணிமாறன் அவர்களின் சொற்பொழிவு |
| 27.07.2004 to 30.07.2004<br>6.00 p.m. - 8.00 p.m. | ஸ்ரீமதி சுதா சேஷய்யன் அவர்களின் சொற்பொழிவு |
| 31.07.2004<br>6.00 p.m. - 8.00 p.m. | "தேவார இசைமணி" திருக்கடையூர் ஸ்ரீ நடராஜன் (ஒதுவார்) அவர்களின் திருமுறை இன்னிசை |
| 01.08.2004<br>6.00 p.m. - 8.00 p.m. | ஈரோடு Dr. ராஜமாணிக்கம் அவர்களின் "ஸ்ரீ ராமலிங்க வள்ளலார் வாழ்வும் வாக்கும்" சொற்பொழிவு |
| 02.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | "சத்குரு ஸ்ரீ ஞானானந்த மாதர் பஜனை மண்டலி" ஸ்ரீமதி கல்யாணி அவர்கள் குழுவினரின் பஜனை |

| | |
|---|---|
| 03.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | சத்குரு ஸ்ரீ கோபாலக்ருஷ்ண பஜனை மண்டலி குழுவினரின் பஜனை |
| 04.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | திருச்சி ஸ்ரீ பிச்சை பாகவதர் குழுவினரின் பஜனை |
| 05.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | மாயவரம் ஸ்ரீ விஜயன்தீக்ஷிதர் மற்றும் ஸ்ரீ முத்துக்ருஷ்ண பாகவதர் குழுவினரின் பஜனை |
| 06.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | கடலூர் ஸ்ரீ கோபி பாகவதர் குழுவினரின் பஜனை |
| 07.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | பாபநாசம் ஸ்ரீ ரமணி பாகவதர் குழுவினரின் பஜனை |
| 08.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | உடையாளூர் ஸ்ரீ கல்யாணராம பாகவதர் குழுவினரின் பஜனை |
| 09.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | ஈரோடு ஸ்ரீ ராஜாமணி பாகவதர் குழுவினரின் பஜனை |
| 10.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | ஸ்ரீ A.L. க்ருஷ்ணமூர்த்தி பாகவதர் குழுவினரின் பஜனை |
| 11.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | விழுப்புரம் ஸ்ரீ ஜெயதீர்த்தன் பாகவதர் குழுவினரின் பஜனை |
| 12.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | உள்ளகரம் சத்குரு ஸ்ரீ ஞானானந்த பஜனை மண்டலி குழுவினரின் பஜனை |
| 13.08.2004<br>6.00 p.m. - 9.00 p.m. | ஸ்ரீ வாஞ்சியம் ஸ்ரீ முரளீதர பாகவதர் குழுவினரின் பஜனை |
| 14.08.2004<br>6.00p.m. - 9.00 p.m. | ஸ்ரீ O.S. சுந்தர் பாகவதர் குழுவினரின் பஜனை |

பூர்த்தி தினத்தன்று ஸ்ரீ பகவானின் திருவுருவசிலை வெள்ளிரதத்தில் திருவுலா

# மாலே மணிவண்ணா - 21

- மஹாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

இனி வராகபுராணம் கூறுமாறு பார்க்கலாம். பிருத்வி என்கிற நிலமகள், விஷ்ணுவிடம் சென்று வணங்கி, ''ஒவ்வொரு கல்பத்திலும் முடிவில் மச்சம், ஆமை, வராகம் என உருவெடுத்து என்னைக் காப்பாற்றுகின்றவர் தாங்களே! நுட்பமாக எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் தங்களை, நாங்கள் கண்டுகொள்வது எளிதல்ல; தங்களின் உண்மை சொரூபம் என்ன? தங்களை அடைவதற்குரிய உண்மையான வழி யாது? பிரபஞ்சப் படைப்பு என்பது எவ்வாறு ஆரம்பித்து எவ்வாறு முடிகிறது?'' என்று கேட்டாள்.

நிலமகளின் கேள்விகளைப் பொறுமையாகக் கேட்ட வராகம், மெல்லச் சிரிக்க ஆரம்பித்தது. அந்த வராகத்தின் வயிற்றில் பிரபஞ்ச உற்பத்தியில் காணப்படும் முட்டை இருந்தது. அந்த முட்டைக்குள் இனி அடுத்த கல்பத்தில் தோன்ற வேண்டிய உயிர்கள் அனைத்தும் இருந்ததை நிலமகள் கண்டாள். நிலமகள் கேட்ட கேள்விக்குரிய விடைகளை வராகம் கூறியதுதான் வராக புராணச் செய்தி. அதில் பிரபஞ்சப் படைப்பு வருகிறது.

ஆதியில் எங்கும் சூனியம், சூனியத்திலிருந்து ஓம் என்கிற பிரணவ நாதம். அந்த நாதத்திலிருந்து ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி, ஒன்றிலிருந்து ஒன்றாக வருகின்றன. இந்த பூமியை உயிர்கள் வாழும் இடமாக ஏற்பாடு செய்து நீருக்குள்ளிருந்து வெளியே எடுத்துவிடுகிறார் விஷ்ணு. இதுவே, மகாப்பிரளயம் என்று கூறப்படுகிறது என்பது வராக புராணத்தில் கண்டதாகும்.

விஷ்ணுவின் இருபத்துநான்கு அவதாரங்களைச் சொல்கிற பாகவத புராணத்திலும் மேற்பட்டு யுகப் பிரளயத்தில் பூமியின் மேல் ஏழு மேகங்களும் பொழிகின்ற நீரை வற்றச் செய்ய 'அன்னப் பறவை'யாக ஸ்ரீ விஷ்ணு அவதாரம் எடுக்கிறார் என்றும் தம் சிறகால் மேக நீர்ப் பெருக்கை வற்றச் செய்கிறார் என்றும் பரிபாடல் கூறுகிற செய்தி புதுமையானதாகும்.

படைப்பு முதலில் நிகழ வேண்டிய பிரம்மனை உந்திக் கமலத்தே தோன்றச் செய்கிறார் விஷ்ணு. முதற்படைப்புக்குத் தேவையான வேதங்களைப் பிரமன் அறிந்தானில்லை; அதனால் ஆதிப் பிரமனாகிய திருமாலே அன்னப் பறவையாக வடிவெடுத்து பிரமனுக்கு வேதங்களைக் கற்பித்துப் படைப்பைத் தொடங்கச் செய்தார் என்ற செய்தி ஸ்ரீமத்ராமாயணத்தில் வருகிறது.

கம்பராமாயணம் ஆரணிய காண்டத்தில் விராதன் வதைப் படலத்தில் விராதன் இராமனைத் தோத்திரம் செய்கிற முறையில் கவிச்சக்கரவர்த்தி கம்பர்,

*''அன்னமாய் அருமறைகள் அறைந்தோய் நீ அவை உன்னை*
*முன்னம் ஆர் ஓதுவித்தார்? எல்லாரும் முடிந்தாரோ?*
*பின்னம் ஆய் ஒன்றாதல், பிரிந்தேயோ? பிரியாதோ?*
*என்ன மாமாயம் இவை? - ஏனம் ஆய் மண் இடந்தாய்''*

என்று கூறி அருளினார். இப்பாடலில் அன்னமானதும், தனம் என்கிற வராகமானதும், முதலிலும் முடிவிலும் வந்து பரிபாடலை நினைவூட்டுகிறது அல்லவா?

பதினெண் புராணங்களில் சொல்லப்படாத திருமாலின் ''அன்ன அவதாரம்'' பரிபாடல் என்கிற சங்க இலக்கியத்தில் வருவதும், அதைப் பின்னால் கம்பராமாயணம் ஓரளவு உறுதி செய்வதும் நோக்க வியப்பு மேலிடுகிறது. இனி பரிபாடலைக் காண்போம்.

*'தீ செங் கனலியும் கூற்றமும் ஞமனும்*
*மாசுஇல் ஆயிரம் கதிர் ஞாயிறும் தொகூஉம்*
*ஊழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு*
*கேழலாய் மருப்பின் உழுதோய் எனவும்*
*மா விசும்பு ஒழுகு புனல் வறள அன்னச்*

*சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய் எனவும்*
*ஞாலத்து உறையுள் தேவரும் வானத்து*
*நால் எண் தேவரும் நயந்து நிற்பாடுவோர்*
*பாடும் வகையே எம் பாடல் தாம் அப்*
***பாடுவார் பாடும் வகை.***

(குறிப்புரை :- தீ செங்கனலி -எல்லாம் தீந்து போகின்ற பெருநெருப்பு; ஊழிக்காலத்துப் பெருநெருப்பு உலகைச் சுட்டெரித்து ஒன்றும் இல்லாமல் ஆக்குதலின் இவ்வாறு கூறினார். ஞமன்-இயமன். கூற்றம்-இயமன் ஏவல் செய்யும் தூதன்; இவனை 'மடங்கல்' எனவும் கூறுவர். ஞாயிறு-சூரியர் பன்னிருவர் 'துவாதச ஆதித்தர்' என்று முப்பத்து முக்கோடி தேவர் எண்ணில் இவர் பன்னிருகோடி. ஊழிக்காலத்துப் பன்னிரண்டு சூரியர்களும் ஒன்றாகத் தோன்றிச் சுட்டெரிப்பர்.

சூரியர் பன்னிருவர் : வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பாஸ்கரன், இரவி, உலோகப்பிரகாசன், உலோக சாக்ஷி, திரிவிக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி, அன்னச்சேவல் - ஆண் அன்னம், சிறகர்ப் புலர்த்தியோய் - இறக்கைகளால் காற்றை உண்டாக்கி காயவைத்தல், ஞாலத்து உறையுள் தேவர் - பூமியில் வசிக்கும் தேவர்; இவரைப் பூசுரர் என்ப. அந்தணர் அல்லது முனிவரைக் குறிக்கும். வானத்து நால் எண் தேவர் - தேவலோகத்தில் உள்ள நான்கு பகுப்பினை உடைய தேவர் - அவராவார் வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், ஆதித்தர் பன்னிருவர், மருத்துவர் இருவர் ஆக முப்பத்து மூவர். நயந்து - விரும்பி, தமக்கு முன்னோராகிய பாடுவார் பாடும் வகையே இவர்கள் பாடுவது. எம் பாடலும் எங்களுக்கு முன்னோராகிய அத்தேவரும் முனிவரும் பாடும் வகையே. மரபு வழுவாமல் நின்னைத் தோத்திரம் செய்கின்றோம் என்றவாறாம்.)

மாசுஇல்-குற்றமற்ற, ஆயிரம் கதிர் - ஆயிரம் கிரணங்களை உடைய, ஊழி ஆழி-உகாந்த காலத்துக் கடல்; ஏழு கடல்களும் ஒன்றாய் சேர்ந்து ஒரே கடலாக ஆகும். உருகெழு-அழகு பொருந்திய, கேழல்-வராகம், உழுதோய்-அழுந்துகின்ற நிலத்தைப் பெயர்த்து எடுத்தோய்; மண்ணைப் பெயர்த்தலை உழுதல் என்பர் ஆதலின் நீருள் அழுந்தும் நிலத்தைத் தோண்டி எடுத்தலை ''உழுதோய்' என்றார். விசும்பு-ஆகாயம், ஒழுகு புனல்-ஏழு மேகங்களும் பொழிகின்ற நீர். ஏழு மேகங்களும் ஊழிக்கண் ஒன்றுகூடி மழை பொழியும் ஏழு மேகங்களாவன. சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளாமுகில், நீல வருணம் என்பன. (தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 21

பரம சாத்வியும், விதுஷியும், தேஜோமயமானவளும், வைபசாலியுமானவளுமான சாதுமாவின் இயற்பெயர் சித்தேஸ்வரிதேவி. ஆனால், அவளை அந்தப் பெயரால் மிகச்சிலரே அறிவர். சாதுக்கள் அனைவருக்கும் அன்னையாகத் திகழ்ந்தாள் சாதுமா. சாதுக்களின் எல்லாவிதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வாள் சாதுமா. அவர்களின் சந்தேஹங்களைத் தீர்த்துவைப்பாள். பஜனை, சாதனை சம்பந்தமாக அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை நீக்குவாள். பலவிதமாக அவர்களுக்கு உற்சாகமளித்து பஜனையில் ஈடுபடுத்தி போஜனம், வஸ்த்ரம் தந்து அவர்களது உலக தேவைகளையும் பூர்த்தி செய்வாள்.

ப்ருந்தாவனத்தில் ரங்கஜிமந்திரைச் சேர்ந்த தோட்டத்திற்குப் பின்னால் ஒரு அழகான நந்தவனத்தில் சாதுமாவின் ஆஸ்ரமம் சாதுக்களுக்கு ஒரு மாத்ருஸ்தானமாக விளங்குகிறது. அனைத்துச் சம்ப்ரதாயங்களையும் சேர்ந்த சாதுக்களும் அங்கு சென்று அன்னையிடம் தங்களது பஜனை, சாதனை ஆகியவற்றைப்பற்றிப் சொல்லி சாந்தி அடைவார்கள். சக்ய **பா**வத்தில் கண்ணனிடம் பக்தி செய்த ஸ்ரீ க்வாரியாபாபா அடிக்கடி அன்னையிடம் சென்று தனது நண்பன் க்ருஷ்ணனைப் பற்றி புகார் சொல்வார்.

ஒருமுறை சாதுமாவின் ஆஸ்ரமத்தில், க்ருஷ்ண கதை நடந்துகொண்டிருந்தது. அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கையில், க்வாரியாபாபா, ஒரு பெரிய தலைப்பாகையுடன், கையில் பெரிய பையுடன், பந்துடன், மூச்சிரைக்க ஓடிவந்து, அன்னையிடம் - ‘அம்மா! அவன் என்னைப் பிடிக்க வருகிறான். என்னை எங்கேயாவது ஒளித்துவை’’ என்றார். அம்மா சொன்னாள், ‘‘மேலே இருக்கும் அறையில் ஒளிந்துகொள்’’. க்வாரியாபாபா கதை நடந்து கொண்டிருக்கும் கம்பீரமான சூழ்நிலைப் பற்றி கவலைப்படாது தடதடவென்று மேலே சென்று ஒளிந்துகொண்டார். கதை முடிந்த பிறகு, அன்னை மெதுவாக அவரிடம் கேட்டதற்கு அவர், ‘‘அம்மா! தினமும் கண்ணன் எனக்கு பந்து விளையாட ஆட்டம் கொடுக்காமல் தப்பித்து ஓடிவிடுகிறான். இன்றைக்கு அவனிடம்

இருந்து பந்தை எடுத்துக்கொண்டு அவனை ஏமாற்றிவிட்டு நான் ஓடிவந்துவிட்டேன்'' என்றார். சாதுமாவும், அவரது **பா**வத்தைப் புரிந்துகொண்டு அவருக்கு வெண்ணை, இனிப்புகள், பாயசம் ஆகியவைகளை உண்ணக்கொடுத்து சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

சாதுமா, அத்வைதாச்சார்யாரின் பரம்பரையைச் சேர்ந்த ப்ரபுபாத் ஸ்ரீ கோவிந்தச்சந்த்ரகோஸ்வாமி என்பவருக்கு சரத்கால துர்காஷ்டமியான புனிதமான தினத்தில் கன்னிகையாகப் பிறந்தார். கோவிந்தசந்த்ரஜிக்கு தன் மகள் பிறப்பதற்கு முன்பே, தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை சாதாரணமான கன்னிகை இல்லை. சாக்ஷாத் யோகமாயைதான் என்று தெரிந்துவிட்டது. இளம் பருவத்திலேயே தகப்பனாரிடம் தீக்ஷை பெற்று, டாகுர் சேவா, பூஜை, ஹரிநாமசங்கீர்த்தனம் ஆகியவைகளில் எந்நேரமும் மூழ்கி இருப்பாள். சில சமயங்களில், அலௌகீகமான ப்ரசங்கங்களும் செய்வாள். தகப்பனாரிடமிருந்து சாஸ்த்ராத்யயனமும் செய்து ஆறு கோஸ்வாமிகளின் க்ரந்தங்களையும் விசேஷ ரூபத்தில் கற்று அறிந்து வைஷ்ணவ சித்தாந்தத்தில் தேர்ச்சியுடன் விளங்கினாள். தந்தையின் மறைவிற்குப் பிறகு ஸ்ரீ ப்ரபோதானந்த சரஸ்வதிபாத் அவர்களின் பரம்பரையை ஒட்டி, சாது வேஷத்தை ஸ்வீகரித்துக்கொண்டு ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபுவின் அடிச்சுவட்டை ஒட்டி தீர்த்த யாத்திரை செய்யக் கிளம்பினாள். அவளது வயதை ஒட்டிய ஸ்த்ரீகளுக்கு இது பெரிய தீரமான செயலாகத் தென்பட்டது. ஆனால், சித்தேஸ்வரிக்கோ மஹாப்ரபு தன்னுடன் எப்பொழுதும் இருப்பதாகவும், யாத்திரை செய்வதாகவும் திட நம்பிக்கை இருந்ததால் எந்தவிதமான பயமும் ஏற்படவில்லை.

யாத்திரையின் நடுவில், 'ஏகச்சக்ரா' என்னும் இடத்தில் நித்யானந்தப்ரபு, வக்ரேஷ்வர் மஹாதேவ் ஆகியவர்களை தர்சனம் செய்துவிட்டு, ப்ரசித்தமான தந்த்ரபீடமான தாராபீடத்தை அடைந்தாள். அங்கு தாராதேவியை தர்சனம் செய்தாள். அந்த சமயத்தில், கோவிலின் முற்றத்தில் ப்ரசித்தமான தந்த்ர சித்தரான மஹாத்மா பாமாகேபா என்பவர் அமர்ந்திருந்தார். அவருக்கு சாதுமாவைப் பார்த்தவுடன் சாக்ஷாத் யோகமாயையே தனக்கு தர்சனம் தருவதற்காக நடந்து வருவது போன்ற அனுபவம்

ஏற்பட்டது. அவர் அன்னையின் சரணங்களில் புஷ்பாஞ்சலி செய்து அன்னையை நமஸ்கரித்தார். சாதுமாவும் அவருக்கு ப்ரதி ப்ரணாமம் செய்தாள். இருவரும் மௌனமாக வெகுநேரம் அமர்ந்திருந்தனர். கிளம்பும்பொழுது, சாதுமா, அந்த மஹாத்மாவிடம், ''நான் எந்நேரமும் மஹாப்ரபு, ராதா-கோவிந்தன் ஆகியோர்களின் லீலா சமுத்ரத்தில் மூழ்கி பஜனை செய்ய விரும்புகிறேன். தயவு செய்து நான் எந்த இடத்தில் எப்படி செய்யலாம் என்று உபதேசம் அளியுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாள்.

உடனே அந்த மஹாத்மா, ஸாதுமாவை, சிறிது காலம் பேலூரில் கங்கை கரையிலும், பிறகு, ப்ருந்தாவனத்திலிருந்து கொண்டு பஜனை செய்யவும் வழி காட்டினார். ஸாதுமாவும் பேலூரில் கங்கை கரையில் ஜனஸந்தடி இல்லாத இடத்தில் கடுமையான சாதனைகள் புரிந்தாள். பிறகு, ப்ருந்தாவனத்தை அடைந்து வம்ஸீவடத்திற்கு அருகிலுள்ள பெரிய குஞ்சத்தில் வஸிக்கலானாள்.

சிறிது காலத்திற்குப் பிறகு, ரங்கஜீ மந்திர் தோட்டத்திற்கு அருகில் ஸாதுமாவின் விஸாலமான ஆஸ்ரமம் நிர்மாணிக்கப்பட்டது. அதில் ஒரு அழகிய கோவிலில் ஸ்ரீ ஸ்ரீ ராதா, குஞ்சகிஸோர்ஜீ ஆகியோர்களின் ஸ்ரீ விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அதே சமயத்தில், ஒன்றன்பின் ஒன்றாக பேலூர், புவனேஸ்வர், புரி, கோவர்த்தன் ஆகிய இடங்களில் ஆஸ்ரமங்களும், கோயில்களும் அமைக்கப்பட்டன.

பேலூரில் ஸ்ரீ ப்ரேமகிசோர்ஜி, புவனேஸ்வரில் ஸ்ரீ ஜகன்னாத்ஜி, ஸ்ரீ பலபத்ரஜி, ஸ்ரீ சுபத்ராஜி, ஸ்ரீ கோபால்ஜி, கோவர்த்தனத்தில் ஸ்ரீ கிரிதாரிஜி, புரியில் சக்ரதீர்த்தத்தில் ரஸராஜரும் மஹா **பா**வமக்னருமான ஸ்ரீ ஸ்ரீ கௌரகிஸோர்ஜி ஆகியோர்களின் விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன. இந்த கௌரகிஸோர்ஜிதான் இன்று ப்ரசித்தமாக ஸ்வர்ணகௌராங்கர் என்று அழைக்கப்படுகிறார். இந்த அனைத்துக் கோவில்களிலும், 'ஹரி பக்தி விலாஸ்' என்ற நூலை ஒட்டி மிகவும் ப்ரேமையுடனும், ஆர்வத்துடனும், விதி விதானங்களுக்குட்பட்டும் டாகுர்சேவா நடந்து வருகின்றன. ஸ்ரீ க்ருஷ்ண ஜன்மாஷ்டமீ, ராதாஷ்டமீ, கௌர்பூர்ணிமா ஆகிய

சமயங்களில் உத்ஸவங்கள் கொண்டாடப்பட்டு விதிப்பூர்வமாக டாகுர்ஜிக்கு அபிஷேகமும் பிறகு ஹோமங்களும் நடக்கும்.

ஒருமுறை, ப்ருந்தாவனத்தில் க்ருஷ்ண ஜன்மாஷ்டமி தினத்தன்று இதுபோன்ற உத்ஸவம் நடந்துகொண்டிருந்தது. மாலை வேளையில் சாதுமா, கோயிலுக்குப் பின்னால் உள்ள துளசி தோட்டத்திற்கருகில் அமர்ந்துகொண்டு ஜபம் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு வ்ரஜயுவதி அன்னையின் முன்தோன்றி, ''என்னுடைய சரீரத்தை ஏன் எரித்துக்கொண்டிருக்கிறாய்? ப்ருந்தாவனத்தில் ஹோமங்களால் என்ன ப்ரயோஜனம், இங்கு நாமயக்ஞமே எல்லா யக்ஞமாக ஆகிவிடுமே!'' என்றாள். அன்னை ஆச்சரியமடைந்து, மிக அழகு பொருந்திய தேஜோ மயமான வ்ரஜயுவதியையே பார்த்துக்கொண்டிருந்தாள். சாதுமாவிற்கு அவள் சொல்வது எதுவும் புரியவில்லை. அவளிடம், ''நீ யாரம்மா'' என்று மெதுவாக வினவினாள். ''நான் வ்ரஜராணி'' என்று கூறிவிட்டு, அந்த யுவதி அந்தர்த்யானம் ஆகிவிட்டாள்.

உடனே, அன்னைக்கு எல்லாம் விளங்கியது. சேவகர்களை அழைத்து, ''இனி ப்ருந்தாவனத்தில் ஒருபொழுதும் ஹோமம் செய்ய வேண்டாம்'' என்று ஆணையிட்டாள். அன்றிலிருந்து சாதுமாவின் ப்ருந்தாவனத்தில் உள்ள கோவிலில் அபிஷேகத்திற்குப் பிறகு ஹோமம் நிறுத்தப்பட்டது.

அன்னைக்கு அனேக சிஷ்யர்கள் இருந்தனர். முக்கியமாக, பஞ்சாபி சிஷ்யர்களிடம் அன்னைக்கு விசேஷமான க்ருபை இருந்தது. அவர்களைப் பற்றி தனது சேவர்களிடம், ''இவர்களது ஆசார விசாரத்தைப் பற்றி நீங்கள் லட்சியம் செய்யாதீர்கள். இவர்களுடைய சரளமான ஹ்ருதயமும், **பா**வ பக்தியும் ராதாக்ருஷ்ண யுகளத்தை அவர்கள் மனதில் நிலைபெறச் செய்துவிட்டது'' என்று சொல்வாள். ரசராஜனான ஸ்ரீ க்ருஷ்ணனும், மஹா**பா**வஸ்வரூபியான ஸ்ரீ ராதையும் கலந்த ஸ்வரூபமான கௌராங்க மஹாப்ரபுவின் பக்தையாக சாதுமா இருந்தபோதிலும், ராதாராணியிடம் அவர்களுக்கு அனன்ய நிஷ்டை இருந்தது. அன்னையால், மஹாப்ரபுவின் சன்யாஸ ரூபத்தை ஒருபோதும் தர்சனம் செய்ய முடியாது. அதே

போன்று அவர் சன்யாஸ தீக்ஷை பெற்ற கட்டத்தை உபன்யாஸமாக காதுகொடுத்து கேட்கவும் முடியாது.

ஒருமுறை, பேலூரில் அன்னையின் ஆஸ்ரமத்தில் ஒரு பக்தன் நிமாயியின் சன்யாஸம் பற்றிய கீர்த்தனையைப் பாடிக்கொண்டிருந்தான். அன்னை, தனது அறையிலிருந்து வெளிவரும்பொழுது, பக்தரின் மூலமாகப் பாடப்பட்ட, 'ப்ரபு நதியா கிராமத்தை விட்டார், ஸன்யாஸம் ஏற்றார்' என்ற வார்த்தைகளைக் கேட்டவுடன் அன்னை மூர்ச்சையடைந்துவிட்டார். வெகுநேரம், அதே அவஸ்தையில் கிடந்தாள். நினைவு திரும்பியதும், ''என் ப்ராணனான கௌர்கிஷோரின் கேசம் வழித்த சிரஸை என்னால் தரிசனம் செய்ய முடியாது. அதைப் பற்றிய கீர்த்தனமும் கேட்கமுடியாது'' என்றாள்.

மாதாவிற்கு ராஸலீலை மிகவும் பிடிக்கும். தனது ஆஸ்ரமத்தில் அடிக்கடி ராஸலீலை அபிநயத்திற்கு ஏற்பாடு செய்வாள். ராஸலீலை பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே **பா**வத்தில் ஆழ்ந்துவிடுவாள். எனவே, ஆஸ்ரமத்தின் இரண்டாவது மாடியில் யாரும் காணாத இடத்தில் உட்கார்ந்துகொண்டு ராஸலீலையைக் கண்டு களிப்பாள். ராஸலீலை நடத்துபவர், ''இரண்டாவது மாடியிலிருந்து அன்னை அபிநயம் செய்பவர்களிடம் விசேஷ சக்தியைப் பாய்ச்சுவதால் அவர்கள் யந்திரம்போல் ஆடுவார்கள்'' என்பார்.

இப்படி ப்ருந்தாவனத்தில் பஜனை, பக்தி, ப்ரேமை ஆகியவற்றைப் பரப்பிய சாதுமா ஒரு வைசாக சுக்ல சப்தமியன்று க்ருஷ்ணனின் நித்யலீலையில் கலந்தார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹ ப்ர

**ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம்**

*31.05.2004 முதல் 06.06.2004 வரை*

இடம் : Canara Union Hall, 8th Main Road,
Malleswaram, Bangalore - 560 003.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 105

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளுடன் அனுதினம் நடந்த நிகழ்வுகளை தேவராஜ முதலியார் எனும் பக்தர் day by day with Bhagavan என்ற நூலில் பதிவு செய்துள்ளார். அதில் ஓரிடத்தில், ''இங்கு வருவோரை ஒரு விசித்திர சக்தி அழைத்து வருவதை நான் பார்க்கிறேன்'' என்கிறார் ஸ்ரீ ரமண மஹரிஷிகள். அதாவது, யாருக்கு அந்த பிறவியானது கடைசி பிறவியோ, யார் முமுக்ஷுவோ (இறை நிலைக்காக பாடுபடுவோர்) அவர்களை ஈச்வர சக்தியானது, இப்பேர்ப்பட்ட மகத்தான தெய்வ புருஷர்களுடன் சேர்த்து வைக்கிறது. மஹாபுருஷர்களின் சங்கம், சொந்த முயற்சியால் கிடைக்காது.

மஹாத்மாக்களின் சங்கத்தை அடைந்தும், மனதானது சிறிது சஞ்சலப்படத்தான் செய்கிறது. மஹான்கள் ஆத்மவிசாரம், த்யானம் ஆகியவற்றை பழகச்சொல்வர். அவற்றை செவ்வனே செய்தால், அது மிகப்பெரிய ஸ்திதியில் கொண்டுசேர்க்கும் என்றும் சொல்கின்றனர். அதைக்கேட்டு, ஆர்வத்தினால் ஓரிருநாள் நாம் த்யானம் செய்ய முயன்று தோற்றுவிடுகிறோம். பின்னர், பத்து நாட்களுக்கு த்யானம் செய்ய முயல்வதில்லை. மறுபடியும், இரண்டு நாட்கள் தியானம் செய்ய முயல்கிறோம். ஆனால், நமக்கு யாதொரு அனுபவமும் ஏற்படுவதில்லை. ''நாம் இப்படி உள்ளோமே! நமக்கு ஞான, பக்தி வைராக்யங்கள் ஏற்படவில்லையே. நமக்கு மோட்சம் உண்டா?'' என்று ஐயப்படுகிறோம். ஆயினும், இது அனாவசியம்.

தேவராஜ முதலியார் எனும் பகவானின் பக்தருக்கு கீழ்கண்டவாறு சந்தேகம் எழுந்தது. அவர் பகவானிடம், ''உங்களை குருவாக அடைந்தும் என் மனம் சஞ்சலப்படுகிறது. தாங்கள் உபதேசிக்கும் சாதனைகளைப் பழகியும், என் வாசனைகள் குறைந்த பாடில்லை. என் வாசனைகளினால் என் மனம் மிக அலை பாய்கிறது. இதனால், மிகவும் துன்புறுகிறேன். இப்படி இருக்கும் என் கதி என்ன?'' என்று கேட்க, பகவானோ, 'உனக்கு என்ன செய்ய

வேண்டும் என்று எனக்குத் தெரியும். நீ சரணாகதி செய்துவிட்டு சும்மாயிரு'' என்று அழகாக பதில் சொல்லிவிட்டார். ஆக, ஒருவர் ஒரு உத்தமான மஹாத்மாவின் சங்கத்தை அடைந்தபிறகு, ''நாம் இவ்வாறு உள்ளோமே! நமக்கு மோட்சம் உண்டா?'' என்று ஐயப்பட வேண்டியதில்லை. மோட்சம், மஹாத்மாக்களை அண்டியோருக்கு சர்வ நிச்சயம்.

உத்தம சரணாகதி செய்தவருக்கு, ''குரு தமக்கு அனுக்ரஹம் செய்துள்ளாரா, இல்லையா, நாம் முன்னேறி இருக்கிறோமா?'' எனும் எண்ணங்கள் தோன்றுவதில்லை. சரணாகதி செய்துவிட்டு குரு அனைத்தையும் பார்த்துக்கொள்வார், என்று இருப்பது சரணாகத லக்ஷணம். ''குரு நமக்கு அனுக்ரஹம் செய்யவில்லையே! நமக்கு வாசனைகள் இன்னும் போகவில்லையே'' எனும் எண்ணங்கள் தோன்றினால், அது பூரண சரணாகதி ஆகாது. மஹாத்மாக்களின் சங்கத்தை அடைந்தபின்னும், வாசனைகள் ஒருவரை அலைக்கழிக்குமாயின் பாதகம் இல்லை. அவருக்கு மோக்ஷம் சர்வ நிச்சயம்.

ஸ்ரீ ராமாவதாரத்தைப்பற்றி ஆச்சாரியார் ஒரு ஸ்லோகத்தில், ''ராமா, உலகில் பலரை ப்ரேமஸ்வரூபி, சமதர்சி என்று சொல்கின்றனர். ஆனால், உன்னைப்போல் ப்ரேமஸ்வரூபியோ, சமதர்சியோ யாரும் இல்லை. ஏனெனில், ஒரு குரங்கையல்லவா நீ ஆலிங்கனம் செய்துகொண்டாய்'' என்கிறார். அதுபோல், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் யாருக்கு மோக்ஷம் கொடுத்துள்ளார் என்றால், ஒரு காக்கா, வள்ளி என்கிற ஒரு மான், ஜாக்கி எனும் ஒரு நாய், லக்ஷ்மி எனும் ஒரு பசு ஆகியவற்றிற்கும் மோக்ஷம் கொடுத்துள்ளார். ரமணாஸ்ரமத்திற்குப் பின்னால் இந்த பசு, பக்ஷி, மிருகங்களுக்கு ஸமாதியும் உள்ளது. பசு, பக்ஷி, மிருகங்களுக்கே மோக்ஷம் கொடுத்துள்ளார் என்றால், அவரையே அண்டி, அவரையே கதி என்றுள்ள சிஷ்யர்களை கைவிடுவாரா என்ன? ஒருக்காலும் இல்லை.

பகவான் ரமண மஹரிஷிகள், அவரது தாயாரான அழகம்மை, பழனிச்சாமி ஆகியோருக்கு ஹஸ்த தீக்ஷை (கைகளினால் தொட்டு அருளுவது) அந்திம காலத்தில் கொடுத்தார் என்றுள்ளது.

அப்படியெனில், ஒரு ஐயம் எழும். ஹஸ்த தீக்ஷை இல்லையெனில், மோக்ஷம் இல்லையோ? என்று ! இவ்வாதம் சரியாகாது. இறைவனும், மஹாத்மாக்களும், எவ்வழியில் ஒரு ஜீவனுக்கு மோக்ஷம் கொடுப்பார் என்பது புரியாதது. ஒரு ஜீவனைப்பற்றி ஸ்மரிப்பதாலோ அல்லது பார்ப்பதாலேயேகூட அவர்களால் மோக்ஷத்தை அருள முடியும்.

பகவான் ஸ்ரீ ரமணர், லக்ஷ்மி மோக்ஷம் அடைந்த தினத்தன்று, 'இலக்குமி விமுக்தநாளாம்' என்ற ஒரு பாடலைப் பாடினார். சாதாரணமாக ஒருவர் வீட்டில் இறந்தால், அவரவரின் சம்ப்ரதாயத்தைக்கொண்டு, இன்னார், 'சிவலோக ப்ராப்தி அடைந்தார்', 'வைகுண்டப் பதவி அடைந்தார்' 'ஆச்சாரியன் திருவடியை அடைந்தார்' என்று தான் சொல்வது வழக்கம். அப்படிப்பட்ட உபசார வார்த்தையா இது? என, அன்பர் ஒருவர் பசு லக்ஷ்மியைப்பற்றி பகவானிடம் கேட்க, பகவானோ, 'இது உபசார வார்த்தை அல்ல. லக்ஷ்மி மோக்ஷம் அடைந்தது சர்வ நிச்சயம்'' என்றார்.

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் பக்தர்கள் பாக்யம் செய்தவர்கள். ஏனெனில், ஏனையோரைக் காட்டிலும் இவர்களுக்கு ஒரு தனி Grade உண்டு. பகவான் பக்தர்களை எப்படி ஆகர்ஷித்தார் என்றால், சித்திகளைக்காட்டி இல்லை. புராண காலத்தில் அகத்தியர் என்றொருவர், சமுத்திரம் முழுவதையும் குடித்துவிட்டார். விஸ்வாமித்திரர் என்பவரோ, தன்னை அண்டிய திரிசங்குவின் பொருட்டு தானே ஒரு ஸ்வர்கத்தையும் ஸ்ருஷ்டித்துவிட்டார். அதற்கு, த்ரிசங்கு ஸ்வர்க்கம் என்றே பெயர். ஆயினும், அகத்தியருக்கோ, விஸ்வாமித்திரருக்கோ, மஹரிஷி என்ற பெயர்தான். பகவான் என்ற பெயரில்லை. இன்றோ, வெறும் விபூதி, குங்குமங்களை வரவழைப்போரைப் பார்த்து, 'பகவான்' என்று காலில் விழுகின்றனர். என்ன ஒரு கேவலமான ஸ்திதி இது. ஆக, சித்திகளைக் கண்டு மயங்கலாகாது. பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் சித்திகளைக் காட்டியதே இல்லை.

யோக வாசிட்டத்தில் ராமருக்கும், வசிஷ்டருக்கும் இடையில் ஓர் சம்பாஷணை. அதில் வசிஷ்டரிடம் ராமர் கேட்கிறார். ''நீர் ப்ரும்மநிஷ்டர்களில் ஸ்ரேஷ்டராக இருந்தும், ஏன் சித்திகளைப்

ப்ரயோகிப்பதில்லை'' என்று ப்ரும்மநிஷ்டர்களில் ஸ்ரேஷ்டராக இருந்தும், ஏன் சித்திகளைப் ப்ரயோகிப்பதில்லை என்று. அதற்கு வசிஷ்டர், ''ராமா, ஞானி என்பவர் யோகியே. ஆனால், யோகி என்பவர் ஞானி அல்ல. யோகியும் மாயா அவஸ்தையில் இருப்பவனே! ஆன்மீக வாழ்க்கையில் சித்திகளை ப்ரயோகிக்கக்கூட வேண்டாம். இத்தகைய சித்திகள் நமக்கு வந்துள்ளனவே! என்று நினைத்துவிட்டாலும்கூட போதும். அதலபாதாளத்தில் விழுந்து விடுவோம். மறுபடியும், அதே நிலைமைக்கு வர பல கோடி ஜன்மங்களாகும்'' என்று கூறினார்.

உலகின் சித்திகளைக் காண்பிக்காத மஹாத்மாக்கள், 'வேலை கிடைக்கவேண்டும். குழந்தை பிறக்கவேண்டும், கல்யாணமாக வேண்டும்' என்று காமிய ப்ரார்த்தனைகளை ஏற்று அருள் செய்வார். பகவான் ரமணரோ, காமிய ப்ரார்த்தனைகளுக்கு செவி சாய்த்தது இல்லை. ஞானத்தபோதனராக மௌனமாகவே இருந்து, விதேசம் (வெளிநாடு) வரை சென்று பக்தர்களை ஆகர்ஷித்திருக்கிறார் என்றால், அவரின் தபோபலம் எத்தகையது என வியக்க வைக்கிறது. அவரைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாலே ஒரு நாள் அவரின் நிலைமையை அடைவோம்.

(தொடரும்)

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# செய்திகள்

### ஏப்ரல் 30-ந் தேதி — ஏகாதசி

மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்தார்கள். அனைவருக்கும் தீர்த்த ப்ரஸாதம் வழங்கினார்கள்.

மாலை 6.30 மணியளவில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதன் புறப்பாடு கண்டருளினார். ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் புறப்பாட்டில் பக்தர்கள், ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் செய்துவர மிகவும் ஆனந்தமாக இருந்தது.

### மே 15-ந் தேதி

மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்தார்கள்.

### மே 24-ந் தேதி

சென்னை திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் காலை 6.30 மணியளவில் நடைபெற்றது.

### மே 30-ந் தேதி

மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்தார்கள். பக்தர்களுக்கு தீர்த்தப்ரஸாதம் வழங்கினார்கள்.

*நமது மிஷனிற்கு கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :*

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam,
New No.2, (Old No.24), Netaji Nagar,
Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

31.05.2004 முதல் 06.06.2004 வரை } ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம்
இடம் : Canara Union Hall, 8th Main Road, Malleswaram, Bangalore - 560 003.

13.06.2004 } ஏகாதசி

29.06.2004 } ஏகாதசி

02.07.2004 } குருபூர்ணிமா

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசனம் நேரம் / இடம் பற்றிய முக்கிய அறிவிப்பு!

- சென்னை ப்ரேமிகபவனத்தில் பராமரிப்பு வேலைகள் நடைபெறுவதால் அங்கு அடுத்த சில மாதங்களுக்கு ஸத்ஸங்கம் நடைபெறாது. அதனால், பக்தகோடிகள் ப்ரேமிகபவனத்தை அணுக வேண்டாம்.
- ஒவ்வொரு ஏகாதசியன்றும் காலை 8 மணி முதல் 11 மணி வரை மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யலாம்.
- ஸ்ரீ ஸ்வாமிஜி ஊரில் இருக்கும் நாட்களில், மதுரபுரி ஆஸ்ரமத்தில், மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை தரிசனம் செய்யலாம்.
- ✆ : 04111-274183 என்னும் தொலைப்பேசி எண்ணைத் தொடர்புகொண்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் இருப்பதை தெரிந்துகொள்ளலாம்.
- ✆ : 044-23710110 என்னும் தொலைப்பேசி எண்ணைத் தொடர்புகொண்டு மதுரமுரளி, மிஷன் வெளியீடுகள் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.
- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசன நேரம் மற்றும் இடம் குறித்து மதுரமுரளியிலும், www.madhuramurali.org websiteலும் அறிவுப்புகள் இடம் பெறும்.

**மங்களானி பவந்து**